# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg


| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |


| 17 ஜூன் 2018 | பொதுக்காலம் 11ம் ஞாயிறு | 2ம் ஆண்டு |
|---|---|---|




அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு விவசாயப் பின்னணியிலிருந்து இன்னொரு உவமையை எடுத்துக் கூறுகிறார். வயலில் விதைக்கச் செல்லுமுன் மண் நன்றாகப் பண்பட்டிருக்க வேண்டும். ஆனால் விதைத்த பிறகு அவ்விதை நிலத்தில் வேரூன்றுகிறது, தளிர் தோன்றுகிறது, இலை வளர்கிறது, பூ மலர்கிறது, கதிர் வெளியாகித் தானியம் உருவாகிறது. இச்செயல்களில் எதையுமே விவசாயி செய்வதில்லை. மாறாக, இயற்கையே செய்கிறது. மனித கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விதத்தில் இயற்கையின் செயல்கள் நிகழ்ந்து, மனிதருக்கு வளமான விளைச்சல் கிடைக்கிறது. இந்த இயற்கை நிகழ்வைப் பின்னணியாகக் கொண்டு இயேசு மக்களுக்கு ஓர் ஆழ்ந்த உண்மையை விளக்குகிறார். கடவுளின் ஆட்சியை இவ்வுலகுக்குக் கொண்டு வருவதில் முக்கியப் பங்காற்றுபவர் கடவுள்தாம். மனிதர் தம் சொந்த முயற்சியால், கடவுளின் துணையின்றி, கடவுளாட்சியை மலரச் செய்ய இயலாது. இதனால், கடவுளாட்சியை மலரச் செய்வதில் மனிதருக்குப் பங்கே இல்லை என்று நாம் தவறாக முடிவுகட்டிவிடலாகாது. கடவுளோடு இணைந்து மனிதர் உழைக்கும் போது கடவுள் ஆட்சி அங்கே மலர்கின்றது. அப்போது கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ற வாழ்க்கைமுறை மனிதருக்கு இயல்பான ஒன்றாக மாறும். அதுவே இறையாட்சியின் மலர்ச்சி. அத்தகைய ஆட்சியைக் கொணர்வதுதான் தம் பணி என்று இயேசு முழங்கினார். அவரோடு இணைந்து மனிதர் செயல்படும்போது அவருடைய இறையாட்சிப் பணி விரிவடையும். மனித சமுதாயம் கடவுள் விரும்பும் சமுதாயமாக, கடவுளின் ஆட்சி நிலவும் குழுவாக மாறும். இத்தகைய புதிய சமுதாயம் இங்கே தொடங்கிவிட்டது என்றாலும் அதன் நிறைவு இறுதிக்காலத்தைச் சார்ந்தது என இயேசு நமக்கு அறிவுறுத்துகிறார். இறையாட்சி மலர, நம் செயல் சிறிய அளவு என்றாலும் கடவுளோடு இணைந்து பெரிய மனதோடு செயல்படுவோம். வாழ்த்துக்கள்.

## GIFT திட்டத்திற்காக இரண்டாம் காணிக்கை

இவ்வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். அதற்கான உங்கள் பங்களிப்புகளைக் காணிக்கைப் பைகளில் போடும்படி அன்புடன் வேண்டுகிறோம். இக்காணிக்கையானது நமது உயர்மறைமாவட்டத்தில் செயல்படும் பல்வேறு அமைப்புகளுக்காகவும் கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 17-06-2018, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் மதியம் **2:30** முதல் **4:00** மணி வரை மூடப்பட்டிருக்கும். நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தத் தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.



## இடைவிடா சகாய அன்னை நவநாள்

**சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.






## தந்தையர் தின வாழ்த்துக்கள்

நமது பங்குத் தந்தையர்கள் அருட்திரு. மைக்கேல் சீத்தாராம், அருட்திரு. நித்திய சகாயராஜ் மற்றும் அருட்திரு. பவுல் இயோ சார்பாக, அனைத்துத் தந்தையர்களுக்கும் எங்களது தந்தையர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.





## நற்கருணை ஆராதனை வழிபாடு

**01-07-2018 ஞாயிறு, காலை 11:00 மணி & மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காக செபிக்கவும், உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.



## முழு இரவுத் திருவிழிப்புச் செப வழிபாடு

**14-07-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை ஆண்டவரிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு

**15-07-2018, ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை (பல்நோக்குச் சமூகக் கூடம்)**

முன்பதிவுக் கட்டணம் $30 செலுத்தி, முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு, கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

**தொடர்பு: திரு. ரெக்ஸ் (98226171)**

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | ள | வு | ற் | ரு | க | தை | ப | கை | ல் |
| ன் | ட | வு | ணி | து | த் | ள | வு | யி | லி |
| ன | ச | நெ | ப | கே | ற | ண | சி | ழ் | ழ |
| த | தி | ரு | மு | ற் | ள் | ச் | லு | வா | நி |
| ரே | கே | ப் | ப | க | யு | கி | யி | ம | த் |
| ம | க் | ப் | ல் | லை | வ | ஞா | சி | வி | பே |
| ல் | மை | ன | ம | ள | ம | வி | ட் | ற | ர |
| கு | ன் | ம் | உ | யா | ல | டை | வ | று | அ |
| டு | ரோ | வ | ட | ண் | ஆ | கை | யை | ழி | பு |
| க | வி | க | வா | பி | ள | வு | ப | டு | ம் |

1. இறையாட்சி __________ விதைக்கு ஒப்பாகும்.
2. ஏனெனில் __________க் காலம் வந்துவிட்டது.
3. உமது பெயரைப் பாடுவது __________ நன்று.
4. நாங்கள் எப்போதும் __________ இருக்கிறோம்.
5. இஸ்ரயேலின் __________ நான் அதை நடுவேன்.
6. இவ்வுடலை விட்டகன்று __________ குடியிருக்கவே விரும்புகிறோம்.
7. உயர்ந்த __________ மரத்தின் நுனிக் கிளை ஒன்றை எடுத்து நானே நடுவேன்.
8. வானத்துப் பறவைகள் அதன் __________ தங்கும் அளவுக்குப் பெருங்கிளைகள் விடும்.

# ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | எசேக்கியேல் 17 : 22 – 24 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 92 : 1-2, 12-13, 14-15 |
| **பதிலுரை:** | உமது பெயரைப் பாடுவது உன்னதரே நன்று. |
| **இரண்டாம் வாசகம்:** | 2 கொரிந்தியர் 5 : 6 – 10 |
| **நற்செய்தி வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! இறைவாக்கு வித்தாகும் கிறிஸ்துவே விதைப்பவர் அவரைக் கண்டடைகிறவன் என்றென்றும் நிலைத்திருப்பான். அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | மாற்கு 4 : 26 – 34 |

# ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

# ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ்   | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.